ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)
19-3 July 2025

Published on 14, July-2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# சாயாவனம் நாவலில் திருமணச் சடங்குகள்

**ர. விண்ணிலவு**
(23PHD0213)
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்

**முனைவர் அ. மரிய செபஸ்தியான்**
உதவிப் பேராசிரியர், நெறியாளர்
சமூக அறிவியல் மற்றும் மொழிகள் பள்ளி
விஐடி பல்கலைக்கழகம், வேலூர்

**ஆய்வு சுருக்கம்**

*தமிழர் சமூக வாழ்வியலில் திருமணம் என்பது ஒரு புதிய குடும்ப உறவின் தொடக்கமாக, சமூக ஒழுங்கமைப்பின் ஒரு முக்கிய அங்கமாகவும் விளங்குகிறது. தொல்காப்பியம் தொடங்கிச் சங்க இலக்கியங்கள் மற்றும் பிற்கால இலக்கியங்களில் குறிப்பிடப்பட்ட திருமணச் சடங்குகள், சாயாவனம் நாவலில் இடம்பெறும் மக்கள் வாழ்வியலில் எவ்வாறு தொடரும் எனக் காணப்படுகிறது. நாவலில் மாப்பிள்ளை வீடு பார்த்தல், நாள் குறித்தல், திருமண வீட்டின் அலங்காரம், மாப்பிள்ளை அழைப்பு, தாலிகட்டும் நிகழ்வு, மணமக்களுக்கு ஆசிர்வாதம், மணப்பெண் மருவுக்குச் செல்லுதல் உள்ளிட்ட சடங்குகள் விவரிக்கப்படுகின்றன. இச்சடங்குகள் வழியாகச் சமூக ஒழுங்கும், உறவுமுறைகளின் உறுதிப்பாடும் வெளிப்படுகிறது. இவை மரபு, பண்பாடு மற்றும் நம்பிக்கையின் அடிப்படையில் கடந்த காலத்திலும், இன்றும் மக்கள் மத்தியில் நிலைத்து இருக்கும் பாரம்பரியங்களையும் கலாசாரத்தையும் திருமணச் சடங்குகள் வெளிப்படுத்துகிறது. இவ்வாய்வின் முடிவில், வாழ்க்கைக்கு உகந்த சடங்குகளைக் காத்து, பின்வரும் தலைமுறைகளுக்கும் பரிமாறுவதை இக்கட்டுரை வெளிப்படுத்துகிறது எனலாம்.*

## Abstract

In Tamil society, marriage marks the beginning of a new family relationship and is an important part of social organization. It can be seen how certain marriage rituals in Sanga literature starting from Tholkappiyam and later literature are followed in the life of the people featured in the novel Sayavanam. The novel describes the rituals including visiting the groom's house, marking the day, decorating the wedding house, inviting the groom, the talikattum event, blessing the bride and groom, and going to the bride's wedding hall. Social Order and stability of relationships emerge through these rituals. These are traditions, culture and fundamentals in the past and today among people.

**திறவுச் சொற்கள்**

*திருமணச் சடங்குகள், மாப்பிள்ளை, சாயாவனம், மரபு, நம்பிக்கைகள், வாழ்வியல்.*

**முன்னுரை**

*திருமணம் மனித வாழ்வின் முக்கிய அங்கமாகத் திகழ்கிறது. இவை மனிதன் ஒழுக்கத்துடன்*

வாழுவதற்கு நிகழ்த்தப்படும் சடங்குகளுள் ஒன்றாகும். திருமணத்தை நிகழ்த்தும் போது மக்களால் வழிவழியாகப் பல்வேறு திருமணச் சடங்குகள் பின்பற்றப்படுகின்றன. அவை தொடர்ந்து கடைபிடிக்கும் போது அவர்களு க்கேயுரிய தனித்த மரபாகக் கொள்ளப் படுகிறது. திருமணச் சடங்குகள் குறித்து, தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள், காப்பியங்கள் மற்றும் இக்கால இலக்கிய ங்கள் வரையிலும் மனிதர்களிடம் வழக்க மாகப் பின்பற்றப்படுவதைப் பதிவு செய்துள் ளன. இத்திருமணச் சடங்குகள் ஒவ்வொரு இனக்குழுக்களுக்கும் மாறுபட்ட போதிலும் சிலச்சடங்குகள் ஒரே மாதிரியாகவே இருப்பதை இலக்கியத்தின் வழி அறிய முடிகிறது. அந்த வகையில், சாயாவனம் என்னும் நாவலில் இடம்பெற்ற திருமணச் சடங்குகளை, பிற இலக்கியங் களில் இடம்பெற்றுள்ள திருமணசடங்குகளு டன் விளக்கிக் காட்டுவதே கட்டுரையின் நோக்கமாகும்.

## சடங்கு

சடங்கு குறித்து வரையறைகளைப் பலரும் கூறியுள்ளனர். மு. சண்முகம்பிள்ளை கூறும் கருத்து, "இங்ஙனம் பரம்பரை வழக்கமாகச் செய்துவரும் செயல்களே சடங்குகளாம். இவை நூல் முறையாலும் சான்றோர் நெறியாலும் வழிவழி வருவன. இவற்றை அறிந்த முதியோர் ஏனையோர்க்கு வழி காட்ட, இவை பின்பற்றப்படுபவை.'' (சங்க தமிழரின் வழிபாடும் சடங்குகளும். பக்.232). சடங்கு என்பது மக்களால் வழிவழியாகத் தொடர்ந்து பின்பற்றப்படும் செயலைக் குறிப்பதெனலாம். மேலும் திருமணத்தில் பின்பற்றப்படும் சடங்குமுறைகளால் ஆண், பெண் உறவுமுறைகளில் ஒழுக்கமான வாழ்க்கையை வாழ்வதற்கும், இருவரின் இணைப்பை கட்டுகோப்பில் கொண்டு வருவதற்கும், வாழ்வில் நன்மை உண்டாவ தற்கும், அதனால் நன்மை பெற்று பிரிவின்றி வாழ்வதற்கு நிகழ்த்தப்படுகிறது எனலாம். இச்சடங்குகளால், மணமக்களுக்கு நனமை விளைகின்றன. மேலும், திருமணம் பற்றிய சடங்குகளைத் தொடர்ந்து பார்ப்போம்.

## திருமணம்

சங்க இலக்கியங்கள் திருமணம் என்ற சொல்லை மணம், மன்றல், வதுவை, வரைதல் எனப் பல்வேறு பெயர்களில் கையாண்டுள்ளனர். பருவம் அடைந்த ஆண், பெண் இருவரையும் இணைத்து வைக்கக்கூடிய ஒரு பெரும் மணவிழாவே ‘திருமணம்’ ஆகும். (இனவரைவியல் பார்வை யில்-சங்க இலக்கியத்தில் மணத்துணையைத் தேர்ந்தெடுக்கும் முறைகள்.பக்4). இத்திருமணம் சங்ககாலத்தில் கற்பு என்ற சொல்லில் வழங்கியுள்ளனர். இதனைத் தமிழின் தொன்மையான இலக்கண நூலான தொல்காப்பியம்,

**‘பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்**
**ஐயர் யாத்தனர் கரணம் என்ப**
(தொல்.பொ.144.)

தம் வாழ்க்கைத் துணைவரைத் தாமே தேர்ந்தெடுத்து வாழ்க்கை நடத்தி வருங்கால் காலக் கடப்பில் ஒரு சிலர் நெறிதவறி த காதலித்த மங்கையைக் காதலிக்கவில்லை என்று கூறினர். களவொழுக்கம் ஒழுகி வாழ்க்கை நடத்தி பிறகு துணைவியைக் கைவிடவும் செய்தனர். இப்பழக்கம் பலரிடம் பரவாமல் இருக்கப் பலர் அறிய திருமணம் நிகழ்ந்ததாக மேற்கூறிய நூற்பாவின் பொருளின் வழி அறியலாம். திருமணம் என்பது ஒருவனுக்கு ஒருத்தியை மணக்கும் கட்டுப்பாட்டு வாழ்க்கையை வெளிப்படுத்தும் சடங்கு முறையாகவும் பார்க்கப்படுகிறது. அந்த வகையில் திருமணம் குறித்து,

**‘கற்பு எனப்படுவது கரணமொடு புணரக்**
**கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்**
**கொடைக்குறி மரபினோர் கொடுப்பக்**
**கொள்வதும்’** (தொல்.பொ.145)

கற்பென்று சொல்லப்படுவது கொள்ளுதற்கு ரிய தலைவன் கொள்ளுதற்குரிய தலைவியைக் கொடுத்தற்குரியார் கொடுப்ப கரணத்தாற் கொள்வதாகும். இந்த வகையில் திருமணம் என்பது பெரியோர்கள் பெண்ணைக் கொடுக்கப் பெறுவது எனலாம். எனவே கற்பு மணம் என்பது பெண்ணைக் கொடுப்பவர்கள் கொடுக்க ஆண் பெறுவ தாகும். இதனையே திருமணம் செய்து வைக்கும் சடங்கு என்பர்.

## நாள் பார்த்தல்

எந்தவொரு நல்ல செயலை தொடங்கு வதற்கு முன்பும் நல்ல நாள் பாத்தல் என்பது மக்களிடையே தொடர்ந்து பின்பற்றப்படும் வழக்கமாக உள்ளது. திருமணத்தில் முதலாவது சடங்கே பெண், மாப்பிள்ளை வீடு பார்த்தல் ஆகும். இதில் முதலில் பெண்ணைப் பார்க்க மாப்பிள்ளை மற்றும் அவரின் நெருங்கிய உறவினர்கள் இணைந்து பெண் வீட்டிற்குச் செல்வர். பிறகு, பெண்

பிடித்தபின் அவர்கள் ஒரு நாள் வந்து மாப்பிள்ளை வீடு பார்க்க அழைப்பார்கள். இது குறித்துச் சி.சுந்தரேசன் 'திருமணச் சடங்கு' எனும் கட்டுரையில், "பெண் பிடித்து விட்ட பிறகு மாப்பிள்ளை வீட்டார் ஒரு நாள் வந்து, நீங்கள் மாப்பிள்ளை வீடு பார்க்க வாருங்கள் என்று கூறுவார்கள். பின், பெண்ணின் தாய், தந்தை, தாய்மாமன் மற்றும் நெருங்கிய உறவினர்கள் சென்று மாப்பிள்ளை வீடு சென்று மாப்பிள்ளை பிடித்திருக்கிறது என்று கூறி, திருமணத்தை எப்போது வைத்துக் கொள்ளலாம் உன்று முடிவெடுப்பார்கள்" (திருமணச் சடங்கு.பக்.1) கூறும் கருத்தின் வழி நாட்டுப்புறவியல் துறையில் இச்சடங்கு பின்பற்றப்படுவதை அறிய முடிகின்றனது. இச்சடங்கு இன்று வரை மக்களிடையே வழக்கத்தில் இருக்கும் ஒரு முக்கியச் சடங்காகும். சடங்குகளைப் பின்பற்றும் அம்மக்களின் பண்பாட்டு மரபாகவும் பார்க்கப்படுகிறது.

திருமணம் குறித்துக் கிராமங்களில் ஒரு பழமொழி உண்டு. "வீட்டைக்கட்டிப் பார் கலயாணத்தைப் பண்ணிப்பார்" என்பர். சமூகத்தில் பிள்ளைகளைப் பெற்றவர்களுக்கு அவர்கள் பருவம் எய்திய பின்பு சரியான வயதில் திருமணம் செய்து வைப்பது அவர்களுக்கேயுரிய கடமையாகக் கருதப்படுகிறது. திருமணத்தேதியை முடிவு செய்யும் போது பெரியோர்களிடம் கேட்டுப்பெறப்படுகிறது. அந்த வகையில், சாயாவனம் நாவலில் மாப்பிள்ளை வீடு பார்க்க அழைப்பு வந்ததை மருமகள் குஞ்சம்மா மாமனார் தேவரிடம் சொல்கிறாள்,

'மாப்பிள்ளை வீட்டிலிருந்து இரண்டாம் முறையாகச் செய்தி வந்தது. சாப்பாட்டு நேரத்தில் குஞ்சம்மாவும் அதையே எடுத்துச் சொன்னாள். (சாயாவனம். பக்-147)

உடனே தேவர், மாப்பிள்ளை வீட்டிற்குச் செல்ல பெரியவர்களிடம் நல்லநாள் பார்த்து முடிவு செய்கிறார்.

"வழியிலே பண்டாரத்தப் பார்த்தேன். 'வெள்ளி வேணாம், சனி போங்க - உத்தமமான நாளு'ன்னான். எதுக்கும் நம்ம ஐயரை ஒரு வார்த்தை கேட்டுட்டு வாரேன். அவுங்க சொன்னா, சனிக்கிழமையே போயிட்டு வந்துடுவோம்." நாள் குறித்ததோடு மட்டுமின்றித் தேவரும் குஞ்சம்மாவும் மாப்பிள்ளை வீட்டிற்குச் செல்ல ஆட்களை அழைத்தனர்.

"ஆண்களையெல்லாம் தேவர் வீடு வீடாகப் போய் அழைத்தார். பெண்களைக் கூப்பிடக் குஞ்சம்மா போனாள். பயணத்திற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளும் முடிந்து விட்டன. வாசலில் மூன்று வண்டிகள் பெண்களுக்காகக் கிடக்கின்றன! (மேலது.பக்-149) என்னும் வரிகளின் வழியே மாப்பிள்ளை வீடுபார்க்க செல்லும் போது நல்ல நாள் பார்த்து, உறவினர்களை அழைத்துச் செல்வதும் ஒரு சடங்காகப் பின்பற்றுவதை அறிய முடிகிறது. இம்முறை தற்போதும் மக்களிடையே வழக்கத்தில் இருப்பதைக் காணமுடிகிறது. நல்ல நாள் பார்த்து மாப்பிள்ளை வீடு செல்வது ஒரு சடங்காக இருப்பதால் வழக்கத்திலும் உள்ளது.

## மாப்பிள்ளை வீடு பார்த்தல்

நல்ல நாள் குறித்தப்படியே மாப்பிள்ளை வீடு பார்க்க பெண் வீட்டார் வருவர். இப்படிச் செல்வதற்குப் பல காரணங்கள் உண்டு. அதில் முதலாவதாக, பெண்பிள்ளை பெற்றவர்கள் தம் பெண் வாக்கப்படும் வீடு, உறவினர்கள், சுற்றம் மற்றும் அவர்களின் குணங்களை உபசரிப்புகளில் இருந்தும் உண்மை நிலையினை அறிந்து கொள்கின்ற னர் எனலாம். அவ்வாறே, சாயாவனம் நாவலில் பெண் வீட்டார் மாப்பிள்ளை வீடு பார்க்க வந்தபோது வரவேற்பு குறித்து,

"உன்னதமான வரவேற்பு. ஒவ்வொருவரும் தனித்தனியேவரவேற்றார்கள். எல்லோரையும் பின்னுக்குத் தள்ளி ஒரு கவனிப்பு; தாள முடியாமல் போயிற்று அவனுக்கு" (சாயா வனம்.பக்-153) தெளிவாகக் குறிப்பிடுகிறது. இதன் மூலம் அவர்களின் விருந்தோம்பல் பண்பு வெளிப்படுகின்றன. அடுத்தாக நாவலில் மாப்பிள்ளை வீட்டின் அமைப்பினை பெண் வீட்டார் பார்க்கும் செய்தினை தெளிவாக எடுத்துக் காட்டடப்பட்டுள்ளது.

"பெரிய வீட்டின் உள்ளும் புறமும் சிதம்பரம் நடந்தான். காமரா உள், சுவாமி உள், பத்தாயம் இருக்குமிடம் எல்லாம் கவனித்துக் கொண்டான். புறப்படும்போது, குஞ்சம்மா அவனிடம் தனியாகச் செல்லி இருந்தாள். 'அளவிடுவது – மதிப்புப்போடுவது மாதிரி பார்வை, பேச்சு, நடத்தைக் கவனிப்பு." (மேலது. பக்.155). மேற்கூறியக் கருத்தின் வழி மாப்பிள்ளை வீடு சென்று பார்த்தல் என்பது பல காரணங்களைக் கொண்டுள்ளன. அதுமட்டுமின்றி, இவை வழிவழியாகச் சடங்காவும் பின்பற்றப்படுகின்றன. சமகாலத்

திலும் மாப்பிள்ளை வீடு பார்த்தல் என்பது மக்களிடம் வழக்கத்தில் இருப்பதை நம்மால் காணமுடிகிறது. மேலும் மாப்பிள்ளை வீடு பார்த்தல் சடங்காகவும் பின்பற்றப்படுகிறது

### நாள் குறித்தல்

“தை பிறந்தாள் வழிப் பிறக்கும்” என்னும் பழமொழி பழந்தமிழரின் வாழ்வியலோடு நெருங்கிய தொடர்புடையது. இக்கருத்து உழவு செய்யும் விவசாயிகளுக்கு மட்டுமின்றித் திருமணம் சார்ந்த நல்ல செயல்களைச் செய்வதற்கும் கிராமப்புறங்களில் பயன் படுத்துகின்றனர். மாப்பிள்ளை வீடு பார்த்து விட்டு திரும்பிய பின்பு இருவரின் வீட்டாருக்கும் திருமணத்தில் சம்மதம் என்றவுடன், இருவீட்டாரின் பெரியோர் களும் இணைந்து திருமண நாள் குறிப்பது மரபாகும். அவ்வாறு

கலித்தொகையில் பெண் கேட்க நல்ல நாள் பார்த்து சென்ற செய்தியை பாடலின் வழி அறியலாம். அப்பாடல் வரிகள்,

**“நெறி அறி செறிகுறி புரிதிரிபு அறியா**
**அறிவனை முந்து நீஇ**

**தகைமிகு தொகை வகை அறியும் சான்றவர்**
**இனமாக”** *(கலி.39.46-47)*

நூல்நெறி அறிந்தவனும், இருவரும் கூடும் முகூர்த்தநாளைக் குறிப்பதில் வல்லவனும், தான் குறிக்கும் நாள் தப்புதல் அறியாத வனும் ஆகிய காலக்கணியனை முன்னால் கொண்டு தகை மிக்கச் சான்றோர் சூழ, மலைநாடன் பெண் கேட்டு வந்த செய்தி விளக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் சாயா வனம் நாவலிலும் இரு குடும்பங்களுக்கும் பிடித்த மாத்திரத்தில் திருமணத்திற்குரிய நாளை குறிக்கின்றனர். அச்செய்தி,

“தன் முயற்சி பலித்தது திருப்தி அளித்தது. இரண்டு குடும்பங்களுக்கும் இடையில் செய்தி பரிமாறிக்கொள்ளப்பட்டது. தைக் கடைசியில் கல்யாணம்.” *(சாயாவனம்.பக்-155)* இடம்பெற்றதிலிருந்து திருமணத்திற்கு நல்ல நாள் தேர்வுசெய்தல் என்பது சடங்கே ஆகும் எனலாம். அச்சடங்கு மக்களிடையே, சங்க காலம் தொடங்கி இன்று வரை கடைபிடித்து வருகின்ற ஒரு நீண்ட நெடிய வழக்கமாகும். இவ்வழக்கங்கள் உயிர்ப்புடன் இருப்பதால் தான், அந்தந்த காலத்தில் தோன்றும் இலக்கியங்களும் விடாமல் பதிவு செய்து கொண்டு வருகின்றன. அவ்வாறே சாயாவனம் நாவலிலும் இச்சடங்குகளைப் பற்றிய குறிப்புகளைப் பதிவு செய்துள்ளார் எனலாம்.

### திருமண வீடு

திருமணம் என்றாலே பலருக்கான மகிழ்ச்சி யின் வெளிப்பாடாகும். ஆகவே தான், திருமண நிகழ்வினை மக்கள் விழாவாகக் கொண்டாடும் நிலை, பண்டையகாலம் தொடங்கி இப்போது வரை தொடர்கிறது எனலாம். திருமணம் நடைபெறும் வீடு மிகவும் பரபரப்பாகவும் வேலை மிகுந்த உறவினர்கள் வருகையும், அளவற்ற மகிழ்ச்சி நிறைந்ததாகவும் காணப்படுகிறது. அவ்வாறு திருமணத்திற்குரிய நாள் நெருங்கி கொண்டிருக்கும் போது திருமண விட்டின் ஆராவராத்தை சாயாவனத்தில் ஆசிரியர் காட்சிப்படுத்தியுள்ளார். அக்கருத்து,

“பத்து நாட்களாக வீட்டின் கொல்லப் புறத்தில் நான்கு உரல்கள் நெல் குத்திக் கொண்டிருந்தன. பத்தாயத்திலிருந்து கொத்த மல்லிச் சம்பா நெல்லை எடுத்து வெளியே போட்டாள் குஞ்சம்மா. புழுக்கிக் காயவைத்து, குத்திக் கொழித்துக் கொடுப்பது பொன்னம்மா வேலை. *(சாயாவனம்.பக்-162)* வழி கல்யாணத்திற்கு முன்பு இருக்கும் பரபரப்பும் உறவினர்களின் ஒத்துழைப்பும் அறியமுடிகிறது.

அடுத்ததாக, இன்னும் திருமணத்திற்கு முன்பே செய்ய வேண்டிய வேலையையும் மனதில் கணக்குப் போட்டு கொள்கின்றாள் குஞ்சம்மா, “இன்னும் எட்டுக் கலம் நெல் குத்த வேண்டும். ஆறு மரக்கால் மாவரைக்க வேண்டும். ராமசாமி செட்டியாரிடமிருந்து ஒன்பது மரக்கால் பச்சைப்பயிறும், முக்குறுணி காராமணியும் வாங்கி வந்து உடைத்துத் தீட்ட வேண்டும்.” *(மேலது.பக்-162)*

மேற்கூறிய வகையில் திருமணம் நிகழ்வதற்கு முன்பு திருமண வீட்டில் நடைபெறும் வேலைகளையும் பகிர்ந்து செய்வதும் உறவுகளின் உண்மைகளை வெளிப்படுத்தும். இவை மக்களிடையே சடங்காகப் பின்பற்று வதைக் காட்டிலும் வழக்கமாகப் பின்பற்றப் படுகிறது. இச்செயல்கள் உறவுகளை வலிப் படுத்தி ஒற்றுமையை வெளிப்படுத்துகின்றன.

### திருமணப் பந்தல் அலங்காரம்

திருமணப் பந்தல் அலங்காரம் என்பது திருமணச் சடங்கில் இன்றியமையாத ஒரு கூறாக உள்ளது. மனித வாழ்க்கையில் திருமணம் மறக்கமுடியா ஒன்றாகும். ஆதலால், இந்நிகழ்ச்சிக்குப் பலவகையான

அலங்காரங்கள் செய்யப்படுகின்றன. திருமண நிகழும் வீட்டை அலங்கரிப்பதை சங்க இலக்கியங்களின் வழி அறிய முடிகிறது. அவ்வாறு, திருமண வீட்டை அலங்கரிப்பது குறித்துக் கலித்தொகையில்,

**"தருமணல் தாழப் பெய்து, இல் பூவல் ஊட்டி."** *(கலி.பா.114.11)*

வரிகளில் திருமணத்தின் போது புதுமணல் பரப்பி, செம்மண் பூசி வீட்டை அழகு படுத்திய செய்தி இடம்பெற்றுள்ளது.

இதுபோன்றே,

**தண் பெரும் பந்தர்த் தருமணல் ஞெமிரி,**

**மனை விளக்குறுத்து மாலை தொடரி**

*(அகம்.பா.86.3-4)*

என்ற அகநானூற்றுப் பாடலிலும் குளிர்ச்சி யான பந்தலை அமைத்து மணலைப் பரப்பி, மணி விளக்கினை ஏற்றி மாலைகளைத் தொங்க விட்டு வீட்டை அழகுபடுத்தியது கூறப்பட்டுள்ளது. இக்கருத்தின் வழியே சங்க கால மக்கள் திருமணப் பந்தல் அலங்காரம் செய்ததை அறியலாம். அதுவே பின் சடங்காகவும் பின்பற்றப்படுகின்றன. சாயாவனம் நாவலில் தேவர் வீட்டு திருமணத்திலும் திருமணப் பந்தலின் அலங்காரத்தைத் தெளிவாகக் காட்சி படுத்தியுள்ளார். "பிரமாண்டமான பந்தலின் நடுவே மணிகளும் ஜிகினாவும் இழைத்த கல்யாணக் கூடம், திருக்குளத்து மண்டபம் மாதிரி. அதில் இல்லாத அழகு கவர்ச்சி. சிவப்பு, மஞ்சள், பச்சை, ஊதா வர்ணத்தில் மணிகள். நீண்ட மணிகள்; குட்டை மணிகள் - வகை வகையாகக் கோர்த்துக் குஞ்சம் கட்டித் தொங்கவிட்டிருந்தார்கள். வீசும் காற்றில் மணிகள் அசைந்து வர்ணம் மாறும் நேர்த்தி; கிணுகிணுக்கும் ஒலி - ரம்யமான காட்சி! (சாயாவனம்.பக்-177) வழியாகப் பந்தல் அலங்கரிப்பின் நேர்த்தியும் அழகும் வெளிப்படுகிறது. சேக்கிழார் இயற்றிய பெரியபுராணத்திலும் திருஞானச்சம்பந்தரின் திருமணத்தில் பந்தலின் அலங்காரம் பற்றித் தெளிவாக விளக்கியுள்ளார். இச்செய்தியிலி ருந்து, திருமணப்பந்தல் அலங்கரிப்பது என்பது மக்களிடையே தொடர்ந்து பின்பற்றப்படும் சடங்காவும் வழக்கமாகவும் இருப்பதை இலக்கியங்களின் வழி அறிய முடிகிறது. அதுமட்டுமின்றி, இன்றைய வளர்ந்துவரும் சமுதாயச் சூழலில் திருமண அலங்காரம் என்பது தனிப்பெரும் கலை யாகவும் வளர்ச்சியடைந்துள்ளன எனலாம். ஏனென்றால் மக்கள் திருமண அலங்காரத் தைச் சிறப்பாகச் செய்யவேண்டுமென்று மிகப்பெரிய கூட்டமும் தொகையும் பயன் படுத்துகின்றனர். அதேபோல், இன்று திருமண அலங்காரம் என்பது மக்கள் மத்தியில் சடங்காவும் மற்றும் தங்களின் வசதியை வெளிப்படுத்தும் இடமாகவும் கொள்ளலாம்.

## மாப்பிள்ளை அழைப்பு

திருமணத்திற்கு முன் நாள் இரவு மாப்பிள்ளை அழைப்பு சடங்கு நிகழும். இதனை மணமகன் ஊர்வலம் என்றழைப்பர். இதனைத் தமிழர் ஒரு மரபாகவே பின்பற்றுகின்றனர். இவ்வாறு மாப்பிள்ளை அழைப்பில் ஊர்வலமாக அழைத்து வருவது குறித்து நாச்சியார் திருமொழியில் ஆண்டாள் தான் கனவில் காணும் திருமணத்திலும் மணமகன் ஊர்வலம் வருவதையும்,

**"வாரணமாயிரம் சூழவலம் செய்து**

**நாரண நம்பி நடக்கிறான்"** *(நா.திரு.பா.556)*

என்ற அடிகளால் வழியேயும் மணமகன் ஊர்வலமாக அழைத்து வருவதைச் சடங்காகப் பின்பற்றி இருப்பதனை அறிய முடிகிறது. சாயாவனம் நாவலிலும் திருமண த்திற்கு முன்பு மாப்பிள்ளை அழைப்பு நடைபெறுகிறது. அப்படி அழைப்பிற்குச் சாரட்டு எனப்படும் குதிரைப்பூட்டிய வண்டிகளைப் பயன்படுத்தியுள்ளனர்.

**'அவுங்களெல்லாம் வந்துட்டாங்களாம்.'**

**'இப்ப சாரட்டும் வந்துடும். அது கூட நீங்க போங்க தம்பி.'** *(சாயாவனம்.பக்-178)*

சாரட்டு எங்க மாமா?

'தோ வந்துகிட்டிருக்கு; பின்னாடியே மேளக்காரன் வரான்; செத்தைக்கெல்லாம் தஞ்சாவூர் 'பேண்டு' வந்துடும். அது வந்ததும் நாம்பப் புறப்படனும்.'

வீடு முழுவதும் விளக்குகள் – ஜகஜ்ஜோதி யாக எரிந்தன. எத்தனை விளக்குகள்! இன்னும் சற்று நேரத்திற்கெல்லாம் மாப்பிள்ளை அழைப்பிற்குப் புறப்பட வேண்டும்.(மேலது.பக்-179) என மாப்பிள்ளை அழைப்பிற்கு மேளதாளங்கள் வைப்பதும் வழக்கமாகும். இச்செய்தியை நாவலின் வழி அறியலாம். மாப்பிள்ளை அழைப்பிற்குப் பெண்வீட்டார் அனைவரும் எதிர்பட்டு அழைத்து வர புறப்பட்டனர்.

"மாப்பிள்ளையை அழைத்து வர ஒவ்வொரு பெண்ணும் பயணப்பட்டுக் கொண்டிருந்

தாள். காலம் காலமாக - ஒவ்வொரு பெண்ணுக்கும் இழையறாமல் நடைபெறும் சடங்கு – மரபுகள் மீதும் ஐதீகங்கள் மீதும் ஆதாரப்பட்டு இருப்பது." (மேலது.பக்-180) இதன் வழி மாப்பிள்ளை அழைப்பு என்பது வழிவழியாகப் பின்பற்றப்படும் நம்பிக்கை சார்ந்த சடங்கு என்றும் மரபு என்றும் அறியலாம். அதுமட்டுமின்றி அழைப்பின் போது பல்வேறு வாத்தியங்கள் இசைத்ததை யும் நாவல் வரிகள் புலப்படுத்துகின்றன.

மாப்பிள்ளை ஊர்வலத்தில், மற்றொரு முக்கியப் பங்கு வகிப்பது உறவினர்கள் ஒன்றுபடுதல் ஆகும். இதனால் மக்களிடையே மகிழ்ச்சி உண்டாகிறது. மாப்பிள்ளையின் பின் தாம்பாளத்தில் திருமணத்திற்குரியப் மங்கலப்பொருட்களைப் பெணகள் தம்கைகளில் ஏந்தி வந்தனர். அச்செய்தி நாச்சியார் திருமொழியில் இடம்பெற்றுள்ளது.

**கதிரொலி தீபம் கலச முடனேந்திச் சதிரிள**

**மங்கையர் தாம் வந்தெதிர் கொள்ள**

(நா.திரு.பா.560)

என்று ஆடல்களில் வல்ல அழகான இளம்பெணகள் தீபம், குடம் முதலான மங்கலப்பொருட்களை ஏந்தி மணமகனுடன் வருவதையும் இவ்வடிகள் வெளிப்படுத்து கிறது. இதிலிருந்து மாப்பிள்ளை வரவேற்பில் பெண்கள் மங்கலப்பொருட்கள் எடுத்து வருவதும் சமூகத்தில் திருமணச் சடங்காக வும் மரபாகவும் பார்க்கப்படுகின்றன எனலாம். இதேபோல் சாயாவனத்தில் மாப்பிள்ளையின் உறவுப்பெண்கள் சாரெட்டுக்குப் பின் மங்கலப்பொருட்களைக் கையில் ஏந்தி வந்ததை, "பதினெட்டுப் படிகளிலும் வரிசையாக வைத்திருந்த 'வரிசை' தட்டுகளை மாப்பிள்ளையின் உறவுப் பெண்கள் மீண்டும் ஏந்திப் பின்னே வர, மாப்பிள்ளை பணிவோடு சாரட்டில் ஏறியமர்ந்தான்."

என்றும்,

"வளையல்கள் சப்தமிட, சிரிப்பும் பேச்சும் கூட்டுச் சேர, பூவின் மணத்தோடு பெண்கள் – ஜீனி, சர்க்கரை, கற்கண்டு, வாழைப்பழம், வெற்றிலைப் பாக்கு, பூ, புடவை, வேட்டி, கோபுரமாய் நவதானியங்கள் நிறைந்த தாம்பாளங்களை ஏந்தி – மெல்ல அசைந்து சென்று கொண்டிருந்தார்கள்."(சாயாவனம்.பக் -180) அடிகள் காட்டுகிறது. மாப்பிள்ளை அழைப்பில் வரும் பெண்கள் மேற்கூறிய மங்கலப்பொட்களை எடுத்து வந்ததை அறியலாம். மேலும் இவை தமிழர் திருமணங்களில் தற்போதும் பலராலும் பின்பற்றி வரும் சடங்காகும். இச்சடங்கு நாவலில் இடம்பெற்றுள்ளது மட்டுமின்றி, தற்போதும் மக்களிடம் வழக்கத்தில் உள்ளதும் குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு சமுதாயத்திற்கும் வெவ்வேறு விதமான திருமணச்சடங்குகள் பின்பற்றப் படுகிறது. தொடக்கத்தில் சிறிய அளவில் நம்பிக்கையின் பாற்பட்டதாக இருந்தாலும் மக்களுடையே தற்போதும் பல சடங்குகள் வழக்கத்தில் வாழ்கின்றன எனலாம்.

## திருமணம் ஒப்பனை

திருமணம் நிகழ்வதற்குரிய காலம் பெரும் பாலும் காலை வேலையாகும். அதனைச் சங்க இலக்கிய அகநானூற்று பாடல் தெரிவிக்கின்றன. அப்பாடலடிகள்,

**கனை இருள் அகன்ற கவின்பெறும் காலை**

(அகம்.பா.86)

மூலம் திருமணம் காலை வேலையில் நிகழும் என்பதை அறியலாம். திருமணத்திற் குத் தேவையான பொருட்களைத் திருமணப் பந்தலில் அழகுற வைக்கின்றனர். பந்தலில் திருமணப்பொருட்கள் வைப்பது சடங்ககா கவே நிகழ்த்தப்படுகிறது. அப்பொருடகள்,

"பொழுது புலரும் முன்னே மேளம் கொட்டி முழங்கியது. ஜிகினாவும் மணிகளும் இழைத்த அலங்காரப் பந்தலில் சரம் சரமாகப் பூ மாலைகள்; குறுக்கும் நெடுக்கு மாக மஞ்சள் நூலும் வர்ண மணிகளும். சிறிய மணமேடை யைச் சுற்றி வாழைக் கன்றுகள்; அதற்கு எதிரே பூரணக் கும்பம்; புதுப்பானை; பாலி வகைகள்; அம்மி; அரசாணிக்கால் ஓமகுண்டம்; குந்தாணி; நாச்சியார் விளக்கு; மாங்கல்யம்; கூறைப் புடவை; வேஷ்டி, வரிசைகள்." அலங்கரிக்கப்பட்டு நெறிப் படுத்தப்பட்ட பின்பு ஐயரின்பால் பல்வேறு சடங்குகள் நிகழ்த்தப்படுகிறது. திருமணம் மணமக்கள் ஒப்பனையில் தொடங்குகிறது. இனி அதனைத் தொடர்ச்சியாகப் பார்ப்போம். திருமணத்திற்கு மணமகன் தயாராவது குறித்துப் பெரியப்புராணத்தில் சேக்கிழார் குறிப்பிகிறார். அச்செய்தி,

**"வேதியர் வதுவைக் கோலம் புனைந்திட**
**வேண்டும் என்னப்**

**பூதநா யகர்தங் கோயிற் புறத்தொரு மடத்திற்**
**புக்கார்"** (தமிழர் திருமணம்.பக்.5)

என்னும் கட்டுரையின் மூலம் மணமகன் மணக்கோலம் பூணுவதற்குத் தாயாராவதை

அறியலாம்.

இந்தவகையில் சாயாவனம் நாவலில் மாப்பிள்ளைக்குத் திருமண வேட்டிக் கொடுப்பதை ஆசிரியர் பின்வருமாறு காட்சிப்படுத்தியுள்ளமை தனிச் சிறப்பு.

"புது நெல் பரப்பி அதன் மீது மடித்துப் போட்டிருந்த சன்னக் கோரைக் கல்யாணப் பாயில் அமர்ந்தான் மாப்பிள்ளை. ஐயர் மந்திரங்கள் சொல்லி, எரியும் அக்னியில் மாவிலையால் நெய்யை அள்ளியள்ளி விட்டுக்கொண்டே, 'மாப்பிள்ளை வேட்டி?" என்றார்.

"இந்தாங்க, சாமி."

நாவதானியங்கள் தூவி, மந்திரங்கள் முணுமுணுத்து, தீர்த்தம் தெளித்து, கோடியின் முனைகளில் மஞ்சள் தடவி, வேட்டியைச் சிவனாண்டித் தேவரிடம் தந்தார். எல்லோரும் ஆசிர்வாதம் பண்ணி ஐயரிடம் தந்தார்கள்.

திரும்பி வந்த தாம்பாளத்தை, மாப்பிள்ளைத் தோழனிடம் கொடுத்து ஐயர் சொன்னார், "சவரம் பண்ணிண்டு குளிச்சிட்டு, அப்புறமா இதைக் கட்டிக்கச் சொல்லு!" என்று. (சாயா வனம்.பக்-182) மணமகனுக்குப் புதிய ஆடை கொடுத்ததை விளக்குகிறது. மேலும் அதே போன்று மணப்பெண்ணுக்கு புதிய துணி உடுத்தும் செய்தியினை நாச்சியார் திருமொழி யில் இடம்பெற்றுள்ளன.

**கோடி யுடுத்தி மணமாலை அந்தரி சூட்ட** (நா.திரு.பா.558)

என்று மணமகள் மணமகனின் சகோதரி யால் புத்தாடை உடுத்தப்பெற்று, மணமாலை சூட்டப்பட்டு அலங்கரிக்கப்படுவதையும் சுட்டிக்காட்டுகிறது. இச்செய்தியிலிருந்து, திருமணம் நிகழ்வதற்கு முன்பு மணமக்களுக் குப் புத்தாடையைப் பெரியோர்களிடம் வாழ்த்துப் பெற்று தருவதை அறியலாம். சாயாவனம் நாவலில் மணப்பெண்ணுக்குப் புதுத் துணி வாழ்த்திக் கொடுத்தமையை, "பெரிய வெள்ளித் தாம்பாளத்தில் கூறை நாட்டுக் கொட்டடிச் சேலை; மஞ்சள், குங்குமம், மல்லிகைப் பூ, சீப்பு, கண்ணாடி - எல்லாம் நிறைந்திருந்தன. ஐயர் அதை எடுத்து, 'சீக்கிரம் ஆகட்டும்" என்று வெள்ளச்சாமித் தேவரிடம் கொடுத்தார். அப்புடவையை மந்திரம் சொல்லி, தீர்த்தம் தெளித்துப் பெண்ணிடம் கொடுத்தார். அவள் கரம் நீளவில்லை; தோழி அவளுக்காக அதனைப் பெற்றுக்கொண்டாள்." (ஞாயாவன ம்.பக்-183) எடுத்துக்காட்டுகிறது. இதுபோன்று, மக்களால் பின்பற்றப்படும் வழக்கங்கள் நாளடைவில் சடங்காகவும் பின் மரபாகவும் கடைபிடிக்கப்படுகிறது. அதேவேளையில் இச்சடங்குகளின் வழி சில சமுதாய மீறல்களும் தடுக்கப்படும். மனிதனை பல சடங்குகள் ஒருவித கட்டுப்பாட்டுடன் வாழ வைக்கின்றன எனலாம்.

## மங்கல இசை மற்றும் தாலி அணிதல்

திருமணத்தில் மங்கல இசைக்கருவிகள் இசைப்பதும் இன்றியமையா ஒன்றாகும் . சங்க காலத்திலும் திருமணத்தின் போது மணமுழவு என்னும் இசைக்கருவி இசைக்கப் படுவது மருதக்கலியில் இடம்பெற்றுள்ளன. இதனை,

**"துணை மலர்க் கோதையார் வைகலும் பாராட்ட**

**மண மனைத் ததும்பும் நின் மண முழவந்து எடுப்புமே"** (கலி.70.9-10)

என்ற பாடல் மூலம் அறியலாம். அதேபோல் இசைக்கருவிகள் இசைப்பதற்கு மெரில் அரசி தம் கட்டுரையில் கூறும் கருத்தும், "திருமணத்தின்போது மங்கலம் இல்லாச் சொற்கள் மணமக்கள் காதில் விழக்கூடாது என்பதற்காக மத்தளம், நாதஸ்வரம் போன்ற இசைக்கருவிகள் இசைக்கப்படுகின்றன." (கலித்தொகை உணர்த்தும் திருமணச் சடங்குகள்.பக்.284) ஒரு வகையில் பொருந்துகிறது. இதுவும் காரணமாக இருக்கலாம். இது சடங்காகவும் பார்க்கப்படுகிறது. ஆண்டாளின் நாச்சியார் திருமொழியில்,

**"மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத**

**முத்துடைத் தாமம் நிரைதாழ்ந்த பந்தர்கீழ்**

**மைத்துனன் நம்பி மதுசூதன் வந்தென்னைக்**

**கைத்தலம் பற்ற"** (நா.திரு.பா.561)

இவ்வடிகள் மூலம் மங்கல வாத்தியங்கள் ஒலிக்க, முத்து மணவறையின் கீழ் மணமகன் மணமகளின் கைப்பற்றுவதையும் குறிப்பிடு கிறது. இக்கருத்தின் வழி திருமணத்திற்கு மங்கல வாத்தியங்கள் இசைப்பதும் ஒருவித சடங்காகவே இருப்பதை இலக்கியங்களின் அறியமுடிகிறது. சாயாவனம் நாவலிலும் மணமகன் தாலிகட்டுவதற்கு முன், இசைகருவிகள் இசைக்கப்பட்டு மணமகள் கழுத்தில் தாலி கட்டப்பட்டுள்ளன. அவ்வடிகள், "நாதஸ்வரத்தோடு மேளம் கிடுகிடுக்க மந்திரங்கள் ஒலிக்க, பூவும்

அட்சதையும் சொரிய, மங்கல வேளையில் தலை குனிந்திருக்கும் பெண்ணின் கழுத்தில் தாலி ஏறியது." (சாயாவனம்.பக்-184) கூறுவதிலிருந்து, திருமணத்தில் மங்கல இசைக்கருவிகள் இசைக்க, பெரியோர்கள் பூவும் அட்சதையும் மணமக்கள் மீது சொரிந்து என்றென்றும் மகிழ்ச்சியாக இருக்கும்படி வாழ்த்த மணமகள் கழுத்தில் தாலி என்ற மங்கல அணியை அணிவித்தான். சங்க இலக்கியத்தில் தாலி அணிந்ததாகக் குறிப்புகள் இல்லை. இது குறித்துத் தொ.பரமசிவம் தம் கட்டுரையில், "நமக்கு கிடைக்கும் தொல்லிலக்கியச் சான்றுகளிலிருந்து (சங்க இலக்கியம், சிலப்பதிகாரம்) அக்காலத்தில் தாலிகட்டும் பழக்கம் இருந்ததில்லை என்றே தோன்று கிறது" என்கிறார். (பண்பாட்டு அசைவுகள். பக்,60). ஆகவே மணப்பெண்ணுக்கு தாலி கட்டும் வழக்கம் என்பது பிற்காலத்தில் வந்த ஒன்றாக இருக்கலாம். மேற்கண்டவாறு திருமணம் நிகழ்வதற்கு முன் மங்கல வாத்தியங்கள் இசைத்து மணமகள் கழுத்தில் மணமகன் தாலி கட்டும் சடங்கே மக்கள் மத்தியில் இன்று வரையில் கடைபிடிக்கப் படுகின்றன எனலாம்.

## மணமக்களுக்குப் பட்டம் கட்டுதல்

திருமணம் முடிந்தவுன் மணமக்களுக்குப் பட்டம் கட்டுதல் என்பது ஒரு முக்கியச் சடங்காகும். இங்கு, மணமக்களின் நெற்றியில் தங்கத்தினாலான காசினை நூலில் கோர்த்துப் பட்டமாகக் கட்டுவர். இது, குறிப்பாக மணமக்களின் தாய்மாமா, மாமி, நாத்தனார்கள் உறவுவானவர்கள் முக்கியமாகப் பட்டம் கட்டுவர். இது தமிழ்த் திருமண முறை என்னும் நூலில், "மண மக்களின் அம்மான்மார்கள் மணமக்களின் நெற்றியில் பட்டம் கட்டுதல். மாமிப்பட்டம், நாத்திப்பட்டம், கட்டுதலும் உண்டு" (தமிழ்த் திருமண முறை.பக்.22) என மயிலைமுத்து கூறும் முறையிலிருந்து இச்சடங்கினை தெளிவாக அறியலாம். மேலும் இருவீட்டாரின் நெருங்கி சொந்தங்களும் விருப்பப்பட்டுப் பட்டம் கட்டுவதும் உண்டு. கிராமங்களில் அவ்வாறு பட்டம் கட்டும்போது பாடல் பாடும் வழக்கம் இருந்துள்ளது. அப்பாடலை,

"கொட்ட மேகமழுங் குலாளொடு கூடினாய் எருது ஏறினாய் துதல்

பட்டமே புனைவா யிசைபாடுவ பாரிடமா

நட்டமே நவில்வாய் மறையோர் தில்லை

நல்லவர் பிரியாத சிற்றம்பலம்

இட்டமா வுறைவாயிவை மேவிய தென்னை கொலோ." (தமிழ்த் திருமண முறை. ப.23)

என்னும் பாடலடிகள் மூலம் பட்டம் கட்டுவதோடு மட்டுமின்றி, பாடல் பாடுவதை யும் அறியமுடிகின்றன. இவ்வாறே, சாயா வனம் நாவலிலும் மாப்பிள்ளையின் உடன் பிறந்த அக்காக்கள் வரிசையாக வந்து மணமகளுக்குப் பட்டம் கட்டினர். அவை, "சற்றைக்கெல்லாம் பட்டம் கட்டும் கூட்டம் மணப்பெண்ணைச் சூழ்ந்துகொண்டது. சொர்ணம் முதல் பட்டம் கட்டினாள் – மாப்பிள்ளையின் பெரியக்கா அவள். ஒரு பவுன் – முழுப் பவுன் பட்டம்; இரண்டு பக்கத்திலும் குண்டு; ஒவ்வொன்றும் கால் பவுன். பெரிய குடும்பத்தின் முதல் மருமகள் அவள்; சம்பிரதாயங்கள் எல்லாவற்றையும் மீறிக்கொண்டு போய்விட்டாள். அதில் பரம திருப்தி அவளுக்கு. அவளைத் தொடர்ந்து அவள் தங்கை இரண்டாவது நாத்தி ராஜாத்தி பட்டத்தை நெற்றியில் கட்டினாள் - முக்கால் பவுன் பட்டம்; கல்யாணமாகாத பெண்களுக்குப் பட்டம் கட்டிக் கிடா ஏற உரிமையில்லை என்பதால் செல்லமாளுக்கு மனம் வாடிப் போயிற்று." (சாயாவனம்.ப-184).இக்கருத்திலிருந்து மணமாகதப் பெண்கள் பட்டம் கட்டுவதற்கு அனுமதிப்பதில்லை என்றறியலாம். மேலும், "நெருங்கிய சொந்தம் முடிவடைந்ததும், நாத்தி முறை ஆக வேண்டியவர்களெல்லாம் பட்டம் கட்டினா ர்கள். தங்கக் காசுகளாலும், பொன் குண்டு களாலும், மஞ்சள் நூல்களாலும், வெற்றிலை களாலும் பாப்பாவின் நெற்றி நிறைந்து விட்டது (சாயாவனம்.பக்-184). இவ்வாறு மணமக்களுக்குப் பட்டம் கட்டும் சடங்கின் வழி பல உறவுகளை இணைத்து வைத்திருக் கிறது எனலாம். பட்டம் கட்டும் திருமணச் சடங்கு மக்களிடையே இன்றும் வழக்கத்தில் பின்பற்றப்படுவதைப் பல திருமணங்களில் காணமுடிகின்றன.

## திருமண வாழ்த்து

திருமணத்தின் போது வாழ்த்துக் கூறுதல் நமது தமிழ் நாட்டின் பழமையான வழக்கமாகும். அந்த வகையில் திருமணத்தில் ஆசீர்வாதம் முதலில் பெற்றோர்களிடம் பெறுவர். அடுத்ததாக வயதில் மூத்தவர்களி டம் பெறுகின்றனர். "சிலப்பதிகாரத்தில் பண்டையக் காலத்தில் பாடப்பட்ட வாழ்த்து குறிப்பிடப்பட்டுள்ளது. அஷ்டமங்க ளையும் ஏந்திய மகளிர் கண்ணகியை,

“காதலர் பிரியாமல்

கவ்வுக்கை நெகிழாமல்

தீது அறுகஎன ஏத்திச்

சின்மலர் கொடு தூவி”

என்று வாழ்த்தினார்களென்று இளங்கோவடிகள் கூறுகிறார் என நா. வானமாமலை தம் நூலில் குறிப்பிட்டுள்ளார். (தமிழர் நாட்டுப் பாடல்கள்.பக்.273). மேலும் திருமண வாழ்த்தினைப் பெண்கள் பாடலாகப் பாடும் வழக்கமும் இருப்பதைத் தம் நூலின்வழி கூறி செல்கிறார். இவ்வாழ்த்து கூறும் செய்தியை சாயாவனம் நாவலில் சிறப்பாக வடிவமைத்துள்ளார் நூலின் ஆசிரியர்.

“பொண்ணும் பிள்ளையும் வராங்க” என்று கருப்பண்ணத் தேவர் சொன்னதும், எல்லோரும் எழுந்தார்கள்.

‘வாங்க!”

ஒரே குரலில் மணமக்களுக்கு அவர்களிடமிருந்து அழைப்புச் சென்றது.

‘சுவாமி காலில் விழு!”

மணமகன் சாஷ்டாங்கமாகச் சுப்பு ஐயர் காலில் விழுந்து வணங்கினான்; அவனைத் தொடர்ந்து பாப்பாவும் நமஸ்கரித்தாள்.

‘தீர்க்க சுமங்கலியா இரு!” என்று சொல்லிப் பணத்தை வெற்றிலைப் பாக்கில் வைத்துக் கொடுத்தார். அது ஒரு சம்பிரதாயம் – பொண்ணும் மாப்பிள்ளையும் கும்பிட்டுப் பணம் பெறுதல்.” (சாயாவனம்.ப-187) என்று ஆசீர்வாதம் பெற்ற பிறகு, மணமக்களை ஊர்ப்பெரியோர்கள் என்றென்றும் இருவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும், என்று மனதார வாழ்த்தி பணத்தை மணமக்களின் கையில் வைத்தனர். இங்குக் குறிப்பிட்டதைப் போல், வாழ்த்துப் பெற்றபின் மணமக்களை வெறுமையாக அனுப்பாமல், வெற்றிலைப் பாக்கில் பணம் வைத்துக்கொடுக்கும் பழக்கம் தற்போதும் மக்களிடத்தில் வழக்கில் உள்ளது. அதேபோல்,

“சற்றே பின்னுக்கு ஒதுங்கி நின்ற சிதம்பரத்தின் கால்களில் மாப்பிள்ளை வணங்கியெழுந்தான். அவன் நெற்றியில் திருநீறு பூசி, வெற்றிலையில் ஒற்றைப் பவுன் வைத்துத் தந்தான். அப்படியே பாப்பாவின் முகத்தில் விபூதிக்கு மேலே குங்குமம் வைத்து ஒரு பவுன் கொடுத்தான்.” (மேலது-187) இக்கருத்தின் மூலம் மணமக்களை வாழ்த்தி பின்பு, பணம் மட்டுமின்றி நகைகளும் வழங்கப்படுவதை அறியலாம். எனவே, மக்கள் இதனையும் திருமணச் சடங்காகக் கொள்ளகின்றனர் எனலாம். இச்சடங்குகள் இன்றும் மக்களிடத்தில் வழக்கத்தில் உள்ளது குறிப்பிடத்தக்கது. பெரியோர்கள் மண மக்களை ஆசீர்வதிப்பதன் மூலம் வாழ்க்கையில் இருவரும் நன்மை பெற்று வாழ வேண்டும் என்ற நம்பிக்கை சார்ந்த சடங்காகவும் இருக்கலாம். மேற்கூறிய பல திருமணச் சடங்குகள், காலம் காலமாக மக்களிடையே வழிவழியாக நிகழ்த்தப்பட்டு இன்றும் பினபற்றப்படுவதால் உயிர்ப்புடன் இருக்கின்றன எனலாம்.

## மருவுக்குச் செல்லல்

திருமண நிகழ்ச்சியில் இறுதியான மற்றும் பெண்ணுக்கே உரிய ஒன்றே மணப்பெண் மறுவீடு செல்லும் சடங்காகும். இதனை ‘மருவுக்குச் செல்லுதல்’ என்றும் அழைப்பர். அதாவது மணப்பெண், தான் இனிமேல் வாழப்போகும் கணவரின் வீட்டிற்கு முதன் முதலாகச் செல்வதைக் குறிப்பிடுவதைக் குறிக்கும் முக்கியச் சடங்கே. இச்சடங்கு திருமணச் சடங்குகளில் இன்றியமையா ஒன்றாகும். இச்சடங்கு குறித்து, சாயாவனம் நாவலில் இடம்பெறும் தேவரின் பேத்தியும், திருமணம் முடிந்த கையோடு மருவுக்குச் செல்லும் காட்சி துளிவுபடுத்துகிறது.

“மணப்பெண் மருவுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தாள்.”

மேலும் மணப்பெண் மருவுக்குக் கணவரின் வீட்டிற்குச் செல்லும் போது சில பொருட்களை உடன் எடுத்துக் கொண்டு போவதும் உண்டு. இதுவொரு சடங்கு எனலாம். நாவலில், பாப்பாவை மருவுக்கு அழைத்துச் செல்லும்போது கொண்டு சென்ற பொருட்கள் எவையெவை என்று நாவலில் எடுத்தாளப்பட்டுள்ளது. அப்பொருடகள் பின்வருமாறு,

“இரண்டாவது வண்டியில் மார்பளவு அண்டா, அதற்கேற்ற தாம்பாளம், நெல் நிறைந்த பித்தளை மரக்கால், விளக்கு, பூரணகும்பப் பானையில் பச்சிரிசி, புழுங்கள் அரிசி, இருபத்தோரு தேங்காய், இருபத்தோரு வெல்லக்கட்டி – மணப்பெண் தன் வீடு போகிறாள். அது அவள் வீடு. இனி சுகமும் துக்கமும் அங்குதான் அவளுக்கு இருக்கிறது. முன்பின் பாத்திராத வீடு நோக்கி – உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கப் போகிறாள் … “வரிசையாகச் சென்ற வண்டிகள் தெரு முனை திரும்பின.” (சாயாவனம்-188) கருத்தின் வழியே அறியலாம். இவ்வாறு

மணப்பெண்ணுக்கு பொருள் கொடுத்தனுப்புவது, தொடக்கத்தில் பெற்றோரின் விருப்பமாக இருந்திருக்கலாம். அதுவே பின்பு சடங்காக மாறியிருக்கலாம். ஆனால் இன்று மணப்பெண்ணுக்கு தரும் பொருட்களைச் சீர்வரிசை என்கின்ற பெயரில் கொடுக்கப் படுகின்றன. மேலும் இதனை, தொடர்ந்து மக்கள் சடங்காகப் பின்பற்றப்படுவதாலேயே இன்று வரையிலும் கூட வழக்கத்திலும் உள்ளன எனலாம். மேற்கூறிய வகையில், திருமணத்தில் பின்பற்றும் பல்வேறு சடங்குகள் இருவரின் பந்தத்தை வலுப்படுத்தும் நம்பிக்கை கொண்டவையாக உள்ளது. இச்சடங்குகள் மணமக்கள் இருவரும் வாழ்க்கையில் மேன்மை பெறுவதற்காகவும், ஒழுக்க நெறி கொண்டு வாழ்வதற்காகவும் முன்னோர்களால் பின்பற்றிய முறைகளாகும். அதே வேளையில் சிலசடங்குகளால் பெண்வீட்டா ரின் பெற்றோர்கள் பல இன்னல்களைச் சந்திக்க நேரிடுகின்றனர். ஆகையால், வாழ்க்கைக்கு உகந்த திருமணச் சடங்கு களைப் பின்பற்றி, தமிழரின் மரபார்ந்த சடங்குகளைக் காப்பதும் அதனை அடுத்தத் தலைமுறைக்குக் கடத்துவதும் சமுதாயக் கடமையாகும்.

## முடிவுரை

சமுதாயத்தில் திருமணம் என்பது வெறும் இரு உயிர்களின் இணைப்பாக மட்டுமின்றி, உறவுகளின் பிணைப்பையும், மரபுகளின் தொடர்ச்சியையும் உணர்த்தும் நிகழ்வாகும். தமிழரின் வாழ்வியலில் திருமணத்திற்குகுண்டான சடங்குகள் காலத்துக்கு ஏற்றவாறு மாறிய போதிலும், அவற்றின் அடிப்படை நோக்கமும், மக்களின் நம்பிக்கையும் இன்று வரை உயிர்ப்புடன் இருந்து வருகிறது. அவ்வகையில், சாயாவனம் நாவலில் திருமணச் சடங்குகள் மிக விரிவாகவும், நேர்த்தியாகவும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இந்த நாவல் திருமண நிகழ்வுகளின் வழியாக, தமிழரின் பண்பாடு, மரபு, உறவுமுறை, சமூக ஒற்றுமை, மகிழ்ச்சி, பகிர்வு ஆகியவற்றை வெறிப்படுத்துகிறது. சமுதாய ஒற்றுமைக்கு இவை மிகுந்த பங்களிப்பை வழங்குகின்றன. எனவே இச்சடங்குகள் காலம் காலமாகப் பின்பற்ற படுகின்றது. அதேசமயம், தமிழர் திருமணச் சடங்குகளின் முக்கியத்துவத்தையும், மரபார்ந்த பண்பாடுகளையும் மறக்காமல், வருங்காலத்திலும் உண்மைதன்மையரிந்து தக்கவைக்க வேண்டும் என்பதே இக்கட்டுரையின் முடிவாக அமைகின்றது.

## துணைநூற் பட்டியல்

1. சாயாவனம், சா.கந்தசாமி, காலச்சுவடு காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ் (பி) லிட்., நாகர்கோவில் 629001,1969.
2. சங்கத் தமிழரின் வழிபாடும் சடங்குகளும், மு.சண்முகம்பிள்ளை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை- 600 113.
3. தொல்காப்பியம் மூலமும் உரையும், கு.வெ.பாலசுப்பிரமணியன், பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்., சென்னை – 14, மூன்றாம் பதிப்பு-2022.
4. கலித்தொகை உணர்த்தும் திருமணச் சடங்குகள், அ.மெரில் அரசி, பணகுடி- 627109, திருநெல்வேலி, புதிய அவையம், volume : 07, Issue : March 2023, ISSN – 2456 -821X.
5. கலித்தொகை உரைவேறுபாடு, மு.முனீஸ் மூர்த்தி, பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்., சென்னை – 14, இரண்டாம் பதிப்பு-2024.
6. அகநானூறு களிற்றியானை நிரை (தொகுதி-1) உரைவேறுபாடு, பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்., சென்னை – 14, இரண்டாம் பதிப்பு-2024.
7. பெரியபுராணம் முதற்பாகம், சூ.சப்பராய நாயகர் (உரை) சிவாலயம் ஜெ.மோகன் (பதிப்பு), சிவாலயம், மயிலாப்பூர், சென்னை – 600 004.
8. நாலாயிர திவ்விய பிரபந்தம் (முதல் ஆயிரம்), வி.எஸ்.வி. இராகவதாசன்(பதி), முல்லை நிலையம், சென்னை – 600 017.
9. அகநானூறு மணிமிடை பவளம் (தொகுதி 2) உரை வேறுபாடு, மா.பரமசிவம், பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்., சென்னை – 14, இரண்டாம் பதிப்பு -2024.
10. தமிழர் திருமணம், வைத்திய கலாநிதி இ. லம்போதரன், கனடா.
11. தமிழர் நாட்டுப் பாடல்கள், நா. வானமாமலை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை-600 050, பத்தாம் பதிப்பு-2022.
12. திருமணச் சடங்கு, சி.சுந்தரேசன், நாட்டுப் புறவியல் துறை, தமிழ் இணையக் கல்வி கழகம், சென்னை.
13. பண்பாட்டு அசைவுகள், தொ.பரமசிவம், காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ் (பி) லிட்., நாகர்கோவில் 629001, இருபத்தாறாவது பதிப்பு-2023.
14. இனவரைவியல் பார்வையில்-சங்க இலக்கியத்தில் மணத்துணையைத் தேர்ந்தெடுக்கும் முறைகள், அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ், ISSN: 2582 – 399X, கோட்டை: 6 வாயில்: 24 அக்டோபர்-2024.